Delivered on 9/11/2017

**பதிவுத்தபால் ஒப்புகை அட்டையுடன்**

**07.11.2017**

**அனுப்புநர்:**
எஸ். பீட்டர் ராஜ் எம்.ஏ., எம்.எட்., பி.ஜி.எல்
ஆவே மரியா, 9, அரிசிக்கடை தெரு, சாத்தான்குளம்
தூத்துக்குடி மாவட்டம் – 628 704
**கைபேசி எண்.** 9442529442 **மின்னஞ்சல்** sssavemaria@gmail.com

**பெறுநர்:**
பொதுத் தகவல் அலுவலர்
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்
சென்னை – 600 025

அய்யா/அம்மா,

**பொருள்:** தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் தகவல் வேண்டுதல் – தகவல்கள் பெறும்பொருட்டு சம்மந்தப்பட்ட கடிதங்கள் மற்றும் ரிட் மனு அப்பிடவிட் நகல்களை அனுப்பிடுதல் - சார்பாக

**பார்வை:**
**1.** நான் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பிய தகவலறியும் மனு நாள் 24.08.2017
**2.** எனது மேல்முறையீட்டு மனு நாள் 03.10.2017
**3.** தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத்தகவல் அலுவலரின் கடிதம் ஒ.மு.எண்.(எல்2)/27010/2017 நாள் 26.10.2017
**4.** சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்கக பொதுத் தகவல் அலுவலரின் கடிதம் 42222/PIO/2017 நாள் 31.10.2017

பார்வை 1 மற்றும் 2ல் குறிப்பிட்டுள்ள தகவலறியும் மனு மற்றும் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத்தகவல் அலுவலர் பார்வை 3ல் காண் கடிதம் மூலம் எனது மனுவினை பிரிவு 6(3)ன்படி தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளார். பார்வை 4ல் காண் தங்கள் அலுவலக கடிதத்தில் தூத்துக்குடி அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி பொது தகவல் அலுவலர் மனுதாரரின் மனுவினை இணைத்தனுப்பாததால் தகவல் வழங்க இயலவில்லை என தெரிவித்துள்ளீர்கள். மேற்படி பார்வை 1, 2 மற்றும் 3ல் காண் கடிதங்களின் நகல்களை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன்.

இணைக்கப்பட்டுள்ள ரிட் மனு 11437/2017 என்பது தூத்துக்குடி டயோசிசன் அசோசியேஷன் என்ற தொண்டு நிறுவனம் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தொடுத்துள்ள வழக்காகும். இந்நிறுவனம் தனது அப்பிடவிட்டில் 6வது பத்தியில் 261 கல்வி நிறுவனங்கள் நடத்துவதாக குறிப்பிட்டுள்ளது. அதில் 31 தொழில் நுட்ப நிறுவனங்கள் நடத்துவதாக குறிப்பிட்டுள்ளது.

Scanned by CamScanner

எனது தகவலறியும் மனுவில் முதல் இனத்தில் கீழ்கண்டவாறு தகவல்கள் வேண்டியுள்ளேன்.

1. In para 6, under Educational Services, it has been mentioned that this NGO runs 31 Technical Institutes. Please send the name and address of these 31 institutes. Please send the copy of latest recognition orders of these institutes.

மேற்கண்ட இனம் 1க்கான தகவல் தரும்பொருட்டு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத்தகவல் அலுவலர் தனது ஒ.மு.(எல்2)/23199/2017 நாள் 11.10.2017 கடிதம் மூலம் தூத்துக்குடி அரசு பாலிடெக்னிக் அலுவகலகத்தின் பொதுத்தகவல் அலுவலரிடம் வேண்டியுள்ளார். அன்னார் தனது கடிதம் 1008/பி1/2015 நாள் 24.10.2017 என்ற கடிதம் மூலம் தங்களை தகவல் அனுப்பிட வேண்டியுள்ளார்.

எனவே தாங்கள் எனது தகவலறியும் மனுவில் முதல் இனத்தில் வேண்டப்பட்டுள்ள தகவல்களை முழுவடிவில் அனுப்பி தருமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

தகவல்களை முழுவடிவில் தாங்கள் தருவதற்கு வசதியாக சம்மந்தப்பட்ட ஆவணங்களை இணைத்தனுப்புகின்றேன்.

நன்றி.

இப்படிக்கு,

07/11/17

இணைப்பு:-

1. பார்வையில் காண் கடிதங்களின் நகல்கள்
2. ரிட் மனு 11437/2017ல் தாக்கல் செய்யப்பட்ட அப்பிடவிட் நகல்

மொத்தம் 16 தாள்கள்

RLAD SATANKULAM <628704>
RLAD A RT610845581IN
Counter No:1,OP-Code:AM
To:PUB INFOR OFFI,THOLILNUDPAIYAKKAM
CHENNAI, PIN:600025
From:PETER RAJ , RICESHOP ST SATANKULAM
Wt:92grams,
PS:.50,Amt:44.50 ,07/11/2017 ,14:01
<<Track on www.indiapost.gov.in>>
India Post
भारतीय डाक

Scanned by CamScanner